தமிழ்நாடு சட்ட மன்றம்

புதன்கிழமை, 1973 பிப்ரவரி 7

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

Sterilisation

* 50. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that it is not permissible to sterilise a married woman without the consent of her husband ;

(*b*) if so, whether the same is an impediment for carrying out sterilisation operation among women ; and

(*c*) if so, whether there is any proposal to recommend to the Central Government to remove this lacuna ?

கருத்தடை அறுவை சிகிச்சை

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருமணமான பெண்ணிற்கு அவளது கணவனின் இசைவைப் பெறாமல் கருத்தடை அறுவை செய்வது அனுமதிக்கத் தக்கதல்லவென்பது உண்மையா ?

(இ) ஆமெனில், பெண்களுக்குக் கருத்தடை அறுவை சிகிச்சையை மேற்கொள்ளுவதற்கு இது தடையாயுள்ளதா ?

(உ) ஆமெனில், இக்குறையை நீக்க மத்திய அரசுக்குப் பரிவுரை செய்யும் செயற்குறிப்பு ஏதேனுமுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) திருமணமாகியுள்ள பெண் தன் கணவனின் எழுத்து மூலமான இசைவைப் பெறாமலேயே அறுவை சிகிச்சை செய்துகொள்ள தற்பொழுது செயலிலுள்ள ஆணைகளின்படி இயலும்.

(இ) & (உ) வினாக்களுக்கு விடை தரக் காரணமில்லை.

Sales Tax

* 52. Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Government have realised the Sales Tax due from the Food Corporation of India;

(b) the amount pending collection; and

(c) the action proposed to be taken by the Government in the matter?

விற்பனை வரி

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இந்திய உணவுக் கழகம் செலுத்த வேண்டிய விற்பனை வரி பாக்கியை (மாநில) அரசு வசூலித்து விட்டதா?

(இ) இன்னும் வசூலிக்கப்பட வேண்டிய தொகை எவ்வளவு?

(உ) இது குறித்து அரசு எடுக்கக் கருதியிருக்கும் நடவடிக்கை யாது?

THE HON. THIRU P. U. SHANMUGAM: (a) An ad hoc payment of Rs. 47 lakhs has been made so far by the Food Corporation of India.

(b) & (c) As regards the balance of amounts pending collection, action is being taken to work out the actual amount due and to collect the amounts in pursuance of the agreement reached between the officers of this Government and the Officers of the Government of India at New Delhi on 26th May 1972.